அ.சா.1.சிவக்குமார், த/பெ.மணி.
எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச மனுதாக்கல் செய்யப்பட்டு அந்த மனு அனுமதிக்கப்பட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி.</u>

20.11.2019 அன்று உத்ரா கிரிடிட்ஸ் நிறுவனத்தில் எதிரி கடன் வாங்கியதற்கான ஆதாரங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் காசோலை மட்டும் தாக்கல் செய்துள்ளேன். தேவைப்பட்டால் மற்ற ஆவணங்களை தாக்கல் செய்ய தயாரா இருக்கிறேன். மேற்படி காசோலை தான் இந்த வழக்கு காசோலை என்றால் சரிதான். உத்ரா கிரிடிட்ஸ் நிறுவனம் கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதற்காக எதிரி மீதோ ஜாமீன்தார் என்ற முறையில் என் மீதோ எந்தவொறு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். உத்ரா கிரிடிட்ஸ் நிறுவனம் கடனை திருப்பி செலுத்தச்சொல்லி எழுத்துப்பூர்வமான அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. நான் செலுத்தியதாக சொல்லக்கூடிய தொகைக்கு எந்த தேதியில் எதிரி காசோலை கொடுத்தார் என்றால் 02.01.2022 அன்று எதிரி காசோலை கொடுத்தார்.

2. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 02.01.2021 அன்று காசோலை கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரியின் கணவர் மீது நாமக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாகவும், அந்த கடனை திருப்பி செலுத்த சொல்லித்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் 08.02.2021 அன்று கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி புகாரில் எதிரி 3 கோடி ரூபாய் திருப்பி செலுத்தவேண்டும் என்று புகார் கொடுத்துள்ளேன். மேற்படி புகாரில் எதிரி எவ்வளவு தொகை என்னிடம் கடன் பெற்றிருந்தார் என்ற விவரத்தை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். மேற்படி புகாரை எதிரி என்னிடம் வாங்கிய கடனுக்காகத்தான் நான் புகார் கொடுத்துள்ளேன். எதிரியின் கணவர் மீது கொடுக்கப்பட்ட புகார் சமரசத்தின் பேரில் அந்த புகார் முடிக்கப்பட்டது. மேற்படி சமரசத்தை **ADSP** அவர்கள்பேசி மரசம் முடித்துவைத்தார். எதன் அடிப்படையில் சமரசம்பேசி முடிக்கப்பட்டது என்றால் எதிரியின் கணவர் 1

கோடியே 27 லட்சம் தருவதாக ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் சமரசம் பேசி முடிக்கப்பட்டது. எந்த தேதியில் சமரசம் பேசி முடிக்கப்பட்டது என்றால் 2021 ஆண்டு மார்ச் மாதம் தேதி ஞாபகமில்லை. எதிரியின் கணவருக்கு நான் உடன்படிக்கை ஒன்று எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உடன்படிக்கை தான் நான் எதிரியின் கணவருக்கு எழுதிக்கொடுத்த உடன்படிக்கை. அந்த உடன்படிக்கை எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது (புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் அந்த உடன்படிக்கை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்படாததால் ஆட்சேபிக்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). அந்த உடன்படிக்கையில் ராயனூரில் உள்ள எதிரியின் கணவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தை எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதன்படி எதிரியின் கணவர் மேற்படி ராயனூர் நிலத்தை என் பெயருக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

3. மேற்படி ராயனூர் நிலம் 02.07.2021 அன்று என் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு என் பெயருக்கு ராயனூர் நிலத்தை எழுதிக்கொடுத்த காரணத்தால் மீதி கடன் தொகை கழிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான். எதிரியின் கணவரிடம் எதிரி சித்ரா பெற்ற கடன் தொகையையும் சேர்த்து கொடுக்கச்சொல்லி நான் எதிரியின் கணவரிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். எதிரி சித்ரா என்னிடம் 02.01.2021 அன்று கொடுத்த காசோலை தேதியில் எதிரிக்கு நான் வாங்கி கொடுத்த மற்ற கடனுக்காக தொகையை எதையும் கேட்கவில்லை என்றால் கேட்கவில்லை. வேறு வழக்கான **STC**.2782/2023 வழக்கிலும் அசல் மற்றும் வட்டி எதுவும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான்.

4. காசோலை திருப்பப்பட்டது குறித்து நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி அறிவிப்பிற்கு எதிரி வழக்கறிஞர் மூலமாக பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி பதில் அறிவிப்பிற்கு நான் மறுப்பு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை. நான் சொல்வது போல் எதிரி உத்ரா கிரிடிட்ஸ் நிறுவனத்தில் எந்தவொறு தொகையும் கடன் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியின் கணவரின் நீண்ட

நாள் நண்பர் என்பதாலும், நான் 2017 வருடம் நான் பணிபுரிந்து வந்த வேலையை விட்டுவிட்டு வந்து வேலையில்லாமல் இருந்துபோது, எதிரியின் கணவரை அணுகி என்னிடம் புதிய தொழில் செய்வதற்கான யோசனைகள் உள்ளதாகவும், அதற்கான பாதி தொகையை நான் செலுத்துவதாகவும், மீதித்தொகையை எதிரியின் கணவர் செலுத்த சொன்னதாகவும் நான் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல.

5. மேலும், மேற்படி தொடங்கவிருக்கும் நிறுவனத்தின் சில தவிர்க்கமுடியாத காரணத்திற்காக மறைமுக பங்குதாரராக இருந்து தொழிலை நான் முன் நின்று நடத்துகிறேன் என்று கூறினேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும், அந்த தொழிலை எதிரியின் பெயரில் தொடங்க அறிவுறுத்தினேன் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் எதிரியின் கணவர் 50 லட்சம் முதலீடு செய்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த தொழிலில் எதிரி அடிக்கடி வெளியூர் செல்லவேண்டியிருந்ததால் தொழில் நடவடிக்கைக்காக என் மேல் உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத காசோலைகளில் கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த காசோலைகள் தொழில நடவடிக்கைக்காக கொடுக்கப்பட்டது என்றும், கடன் வாங்குவதற்காக கொடுக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி தொழிலின் கணக்கு வழக்குகளை எதிரியின் கணவருக்கு சரிவர காட்டாமல் இருந்துவந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் கணவர் பலமுறை என்னிடம் கணக்கு வழக்குகளை காட்ட சொல்லி வந்தார் என்றால் சரியல்ல. மேலும், தொழிலின் அபிவிருத்திக்காக மேலும் தொகையை எதிரியின் கணவர் என்னிடம் முதலீடு செய்யும்படி கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. ஆனால், எதிரியின் கணவர் நான் கணக்கு வழக்குகளை காட்டாமல் இருந்துவந்ததால் மேலும் முதலீடு செய்ய மறுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

6. எதிரியின் கணவர் மேற்படி நிறுவனத்தில் இருக்கக்கூடிய ஆவணங்களை சரிபார்த்தபோது, எதிரி கையொப்பம் மட்டும் செய்த 7 காசோலைகள் கணக்கில் வராமல் இருப்பதை குறித்து தெரிந்துகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காசோலைகளை எதிரி என்னிடம் கேட்டு வந்ததற்கு நான் எந்தவொறு காரணமும் சொல்லமால் தவிர்த்து வந்தேன் என்று சொன்னால்

சரியல்ல. ஆகையால், எதிரியின் கணவர் மேற்படி 3 நிறுவனங்களையும் 2019 ஆண்டு செப்டம்பர் மாதம் முடித்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதன்பின்னிட்டும், எதிரியின் கணவர் அவர் முதலீடு செய்த தொகையை தங்களிடம் கேட்டுவந்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் நான் பொய்யான கதைகளுடன் தொழில் மிகுந்த நஷ்டம் அடைந்துவிட்டது என்றும், நான் பலரிடம் கடன் வாங்கி தொழில் நிறுவனங்களில் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆனால், நான் 2021 ஆண்டு ஜனவரி மாதம் எதிரியின் கணவரிடம் நீங்கள் முதலீடு செய்த தொகையை அதிகப்படியான வட்டி திருப்பி செலுத்தவேண்டும் என்றும், இல்லையென்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் மிரட்டி வந்தேன் என்றால் சரியல்ல. இந்த சூழ்நிலையில், எதிரியின் கணவர் 08.02.2021 அன்று பதிவு தபால் மூலம் காசோலைகளை திருப்பி தரச்சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பினார் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பானது 11.02.2021 அன்று **Refused so return** என்ற காரணத்திற்காக தபால்துறையால் திருப்பப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்நிலையில், 12.02.2021 அன்று நாமக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எதிரியின் கணவருக்கு நான் புகார் அளித்திருப்பதாகவும், அந்த புகாருக்கு ஆஜராகும்படி போன் மூலம் தகவல் தரப்பட்டது என்றும் சொன்னால் சரிதான்.

7. மேற்படி புகாரில் நான் மேற்சொன்ன எதிரியின் 3 நிறுவனங்களின் பங்குதாரர் என்பதை மறைத்து எதிரியின் கணவர் என்னிடம் வட்டிக்கு பணம் வாங்கியதாகவும், அதை திருப்பி தரவில்லை என்பதற்காக புகார் கொடுக்கப்பட்ட விவரம் எதிரியின் கணவருக்கு தெரிய வந்தது என்று சொன்னால் சரியல்ல. எனக்குள்ள அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரியின் கணவரை மிரட்டி 1 கோடியே 60 லட்சம் நஷ்டத்தை ஏற்கும்படி மிரட்டப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் கணவர் வேறுவழியின்றி மிரட்டலுக்கு பயந்து மேற்சொன்னதொகையை தருவதாக ஒப்புக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. மேலும், அந்த பெருந்தொகையை தருவதற்கு 6 மாதம் காலஅவகாசம் வேண்டுமென்று கேட்டார் என்றாலும், காவல்துறை அதிகாரிகள் எதிரியின் கணவர் பெயரில் உள்ள நிலத்தை கிரையம் செய்து கொடுக்க கட்டாயப்படுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனடிப்படையில் எதிரியின் கணவர் சந்தைமதிப்பு 1

கோடியே 60 லட்ச ரூபாய் மதிப்பு 16 சென்ட் நிலத்தை எனது பெயருக்கு எழுதிக்கொடுத்தார் என்றாலும் சரியல்ல. அதன் மதிப்பு 1 கோடியே 10 லட்சம் ஆகும். எதிரியின் கணவரோ, எதிரி சித்ராவோ என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. மேற்படி நிறுவனத்தின் பங்குதாரர் என்ற முறையில் நான் பெற்ற கடனுக்காக எதிரியின் நிலத்தை நான் ஏற்கனவே எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில், எதிரி என்னிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால் அதற்கான உரிய ஆவணங்கள் கடன் தேதி, நிலுவைத்தொகை ஆகியவற்றை குறிப்பிட்டு எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் கணவர் மீது இந்நீதிமன்றத்தில் காசோலை வழக்கு உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கை சிவமணி என்பவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த சிவமணி எனக்கு நன்கு தெரிந்த நபர் என்றால் அவர் என் நண்பர். அந்த கடனுக்கும் நான் தான் சிபாரிசு செய்தேனா என்றால் நான் சிபாரிசு செய்தேன். அந்த காசோலை கடனை நான் அடைக்கவில்லை. நான் சிபாரிசு செய்த காரணத்திற்காக சிவமணி என்னிடம் அந்த தொகையை செலுத்த சொல்லி என்னை கட்டாயப்படுத்தவில்லை என்றால் கேட்டார் ஆனால் எழுத்துப்பூர்வமாக எதுவும் கேட்கவில்லை.

9. எதிரியின் கணவர் மீது சிவக்குமார் சென்னையில் ஒரு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சென்னையில் தாக்கல் செய்த காசோலை வழக்கு கடனுக்கும் நான் தான் சிபாரிசு செய்தேன். சென்னையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கும் என்னிடம் கடனை செலுத்த சொல்லி என்னை கட்டாயப்படுத்தவில்லை என்றால் கேட்டார் ஆனால் எழுத்துப்பூர்வமாக எதுவும் கேட்கவில்லை. எதிரியின் கணவர் என்னிடம் உள்ள எதிரி மற்றும் எதிரியின் கணவரின் காசோலைகளை வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் கேட்டதை தெரிந்துகொண்டு நான் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பியனுப்பிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அறிவிப்பின் சங்கதிகளை தெரிந்துகொண்டு நான் பின்னிட்டு நாமக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளிடரிம் பொய்யான சங்கதிகளை

கொண்டு புகார் அளித்து அவரை மிரட்டி எதிரியின் கணவரின் இடத்தை எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படியான கடன் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி என் மீதுள்ள நம்பிக்கை வைத்து கையொப்பம் செய்த வெற்று காசோலைகளை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை. இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்,
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.